பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 26 திங்கட்கிழமை 11.07.2022 கதிர் 138

## ‘காஸ்’ விலை மேலும் 50 ரூபாவால் உயர்வு




‘லிட்ரோ’ சமையல் எரிவாயு விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் இந்த அதிகரிப்பு அமுல்படுத்தப் ☞2

# நான் ஏற்கனவே கூறியவாறு ‘ஜூலை 13’ பதவி துறப்பேன்

### ரணிலிடம் கோட்டா தெரிவிப்பு பிரதமர் அலுவலகம் அறிக்கை



தான் முன்னர் அறிவித்தவாறு குறித்த திகதியில் பதவி விலகுவேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியுள்ளார்.

பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி தான் ☞2



## ஆஸி. செல்ல முயன்ற மேலும் 77 பேர் கைது!

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 77 பேர் மட்டக்களப்பு - களுவங்கேணியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இன்று அதிகாலை கடற்படையினர் மற்றும் பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் ☞2

## பிரதமர் பதவிக்குச் சுமந்திரனுக்கு அழைப்பு வந்திருந்தால் சந்தோஷம்

### ஏனெனில் அவர் எனது மாணவர் என்று விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(இ.கலையமுதன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பியைப் பிரதமராகப் பதவியேற்க அழைப்பு வந்தது என்றால் உண்மையிலேயே நான் சந்தோம் அடைவேன். ஏனென்றால் அவர் என்னுடைய மாணவர். பல வருட காலமாகத் தெரிந்தவர் என்ற வகையில் அதற்கு நான் எதிர்ப்பு அல்லன். ☞2

# புதிய அரசை நிறுவத் தயார்

### சஜித் விசேட அறிவிப்பு



ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட ‘மொட்டு’ அரசின் மக்கள் ஆணை முடிந்து விட்டது. ☞2

## இலங்கைக்கு இந்தியப் படையினர்? மறுக்கின்றது உயர்ஸ்தானிகராலயம்



இலங்கைக்கு இந்தியப் படையினர் அனுப்பப்படுகின்றனர் என்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள தகவல்களில் உண்மையில்லை என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இது போன்ற கருத்துக்கள் இந்திய அரசின் நிலைப்பாட்டுக்கு எதிரானது என்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் கூறியுள்ளது.

இது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ☞2



## புஸல்லாவை விபத்தில் இருவர் பரிதாப மரணம்

### ஆத்திரத்தில் பஸ்ஸை எரித்த மக்கள்

புஸல்லாவை, காச்சாமலை வீடன் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர். மேலும் சிலர் காயமடைந்துள்ளனர். ஆத்திரமடைந்த மக்கள் பஸ்ஸையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

புஸ்ஸலாவ, பெரட்டாசி தோட்டத்திலிருந்து, புஸ்ஸலாவை நகரத்துக்குப் பயணிகளை ஏற்றிவந்த பஸ்ஸே வீடன் பகுதியில் வைத்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் ‘புட்போட்’டில் பயணித்த இருவரே, பஸ் மண்திட்டில் சாய்ந்ததால், அதில் சிக்குண்டு பலியாகியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் பெரட்டாசி தோட்டத்தில் வசிக்கும் சுரேன்ஜித் புஷ்பகுமார் (வயது 39) மற்றும் ஹெல்போட 7ஆம் கட்டை தோட்டத்தில் வசிக்கும் ☞2

## மேலும் 6 பேர் தமிழகத்தில் தஞ்சம்

### - வவுனியாவைச் சேர்ந்தவர்கள்



(ரு.லோகதயாளன்)

இலங்கையில் நிலவும் தொடர் பொருளாதார நெருக்கடி காரணமாக மேலும் 6 பேர் இன்று அதிகாலை தமிழ்நாட்டைச் சென்றடைந்துள்ளனர். ☞2


## இலங்கை அணியை துரத்தும் கொரோனா

### இதுவரை 6 வீரர்கள் பாதிப்பு



இலங்கை கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ☞2

## ‘யாழ் ராணி’ சேவை ஆரம்பம்



யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே ‘யாழ். ராணி’ என்ற விசேட ரயில் சேவை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள் மற்றும் அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கு வசதியாக இந்தச் சேவையை ரயில் திணைக்களம்மேற்கொண்டுள்ளது. ‘யாழ். ராணி’ ரயில் சேவையின் ☞2

## யாழ்.ராணி.........
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம் காங்கேசன்துறையிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்படும் ரயில் காலை 8.11 மணிக்கு முறிகண்டியை அடையும்.

அங்கிருந்து மீண்டும் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் ரயில் முற்பகல் 11.20 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் ரயில் மாலை 4.10 மணிக்கு முறிகண்டியை வந்தடையும்.

முறிகண்டியிலிருந்து மீண்டும் 4.40 மணிக்குப் புறப்படும் இந்த ரயில் இரவு 7.20 மணிக்கு காங்கேசன்துறையைச் சென்றடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஒரு வழிக் கட்டணமாக 90 ரூபாவும், யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கு 60 ரூபாவும், யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு 35 ரூபாவும் அறவிடப்படும்.

## ஆஸி செல்ல......
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெண் ஒருவர் உட்பட 17 பேர் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஏனைய 60 பேரும் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## நான் ஏற்கனவே.......
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி விலகுவேன் என்று தன்னிடம் ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்று நேற்றுமுன்தினம் இரவு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகியதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரையில் தாம் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்று காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு ..........
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றோம். இந்தக் கடினமான காலகட்டத்தைக் கடக்க முயற்சிக்கும் இலங்கை மக்களுடன் இந்தியா துணை நிற்கும்.

இலங்கையும், அதன் மக்களும் எதிர்கொள்ளும் பல சவால்களை இந்தியா அறிகின்றது - என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அறுதிப் பெரும்பான்மையுடன் ஜனநாயக முறையில் தேர்தல் ஊடாகத் தெரிவான ராஜபக்சக்களுக்கு இராணுவ உதவிகள் தேவைப்பட்டால் இந்தியா வழங்க வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி நேற்று 'ருவிட்டர்' பதிவொன்றின் ஊடாகக் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'காஸ்' விலை ..........
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி 12.5 கிலோ சிலிண்டர் ஒன்றின் விலை 4 ஆயிரத்து 910 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடைந்த நிலையில், நாடு முழுவதும் இன்று முதல் எரிவாயு விநியோகம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அளவுக்கு அதிகமாக எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்வதைத் தடுக்கும் வகையில் வீட்டு மின்சாரப் பட்டியல் அடிப்படையில் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## புஸல்லாலாவை.......
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயகுமார் கவிஷ்கர் (வயது 20) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுமார் 80 பேர் வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர். அதிகளவான பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்ததாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. பலர் புட்போட்டிலும் தொங்கிக்கொண்டு பயணித்துள்ளனர்.

சிறு காயங்களுக்குள்ளானவர்கள் ஆரம்பகட்ட சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். உயிரிழந்த இருவரினதும் சடலங்களும் புஸல்லாவை, வகுவப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்துச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள், பஸ்ஸை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். பெரட்டாசி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## இலங்கை அணியை .......
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெத்தும் நிஸ்ஸங்க கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

ஆஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் நிலையில் அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன் காரணமாக அவர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பெத்தும் நிஸ்ஸங்கவுக்காக, ஓத பெர்னாண்டோ அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ள இலங்கை அணியில், கொரோனாத் தொற்றுக்கு உள்ளான வீரர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி குணமடைந்த, ஏஞ்சலோ மெத்யூஸ் தற்போது அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

## மேலும் 6 பேர்.......
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட 6 பேரும் மன்னார் ஊடாக அரிச்சல் முனையை அண்மித்த முதலாவது தீடையைச் சென்றடைந்தனர்.

தீடையில் இருந்து அரிச்சல் முனையை அடைந்த 6 பேரையும் மீட்ட மரைன் பொலிஸார், அவர்களை மண்டபம் முகாமில் ஒப்படைக்கவுள்ளனர்.

இவ்வாறு சென்ற 2 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேரில் 2 ஆண், 2 பெண் மற்றும் 2 சிறுவர்கள் அடங்குக்கின்றனர். இவர்கள் வவுனியா - நெளுக்குளத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## பிரதமர் பதவிக்கு.......
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உத்தியோகபூர்வமல்லாத வகையில் சுமந்திரனைப் பிரதமராக நியமிக்கலாம் என்று அணுகிய நிலையில் அதை அனைத்துக் கட்சிகளும் இணைந்து அழைத்தால் தான் அந்தப் பதவியை ஏற்க முடியும் எனச் சுமந்திரன் கருத்துத் தெரிவித்திருந்தார். இதைச் சுமந்திரனுக்குத் தெரிந்த ஒருவர் என்னிடம் கூறினார்.

இது பற்றி இணையவழிக் கலந்துரையாடலில் கூறியதன் காரணமாக இன்று அது பரகசியமாகியுள்ளது. ஆனால், சில விடயங்களை மனதில் வைத்திருக்க வேண்டும். சுமந்திரன் தன்னுடைய கட்சியினுடைய ஏகோபித்த விருப்பத்திலா அல்லது தன்னுடைய தனிப்பட்ட விருப்பத்திலா பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வது என்பது ஒரு கேள்வி.

இரண்டாவது கேள்வி, தமிழர்கள் அமைச்சுப் பதவியை ஏற்றதன் பிற்பாடு அவர்கள் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தால், தாங்கள் என்ன காரணத்துக்காக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள் என்பதை மறக்க வேண்டிய நிலை ஏற்படும்.

காரணம் எந்த நேரமும் மத்திய அரசுடன் இணைந்து வேலையைச் செய்யும்போது மத்திய அரசினுடைய விருப்புத் தாக்கம் செலுத்துவதால் தமிழ் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதை மறந்துவிடக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

நான் நினைக்கின்றேன் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஏற்றதன் பின்னர் அமிர்தலிங்கத்தின் வாழ்வில் பல முரண்பாடுகள் ஏற்பட்டன. சம்பந்தனும் அதேபோலவே.

சுமந்திரன் இவ்வாறு பிரதமர் பதவி ஏற்றுக்கொள்வதானால் தமிழ்க் கட்சிகள் அனைத்தினதும் ஏகோபித்த விருப்பைப் பெற்றுக்கொண்டால் நல்லது என நினைக்கின்றேன்.

தற்போதுள்ள சூழலில் ஜனாதிபதி பதவி விலகினால் பிரதமரும், பிரதமர் செயலிழந்து போனால் - அவருக்கு முடியாதுபோனால் ஒரு மாத காலத்துக்குச் சபாநாயகரும் பதில் ஜனாதிபதி பதவியை ஏற்க உரித்திருக்கின்றது. ஆகவே, ஜனாதிபதிக்குப் பதிலாகப் பிரதமரும் பிரதமருக்குப் பதிலாக சபாநாயகருமென அந்த மூன்று பேருக்குமே அந்த உரித்துக் காணப்படுகின்றது.

புதியவர்கள், புதிய முகங்கள் என்பதற்காக நாங்கள் சர்வகட்சி அரசு அமைக்கப் போகின்றோம் என மக்கள் முன் வந்தால் அதனால் எந்தப் பயனும் கிடையாது.

எதிர்க்கட்சிகள் இணைந்து அரசு அமைப்பது என்பதை விட எங்களிடம் என்ன கொள்கைகள், என்ன மாதிரியான விடயங்களை முன்வைத்து நாம் அரசை அமைக்கப் போகின்றோம் என்பதே முக்கியம் - என்றார்.

## புதிய அரசை.........
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இந்த அழகான தீவை அழித்தனர். இவ்வாறு அழிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் நாங்கள் தயார்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ இன்று விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஸ்திரப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குப் பங்களிக்கவும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசை நியமிப்பதற்கு நாம் தயார்.

இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக யாராவது நாடாளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயலாகும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் எமக்கு ஒத்துழைக்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆண்டிகள் கட்டிய மடம்

மாற்றம் ஒன்றே மாறாதது. இது புரியாமைதான் பல பிரச்சினைகளுக்குக் காரணம்.

எதிர்க்கட்சியில் இருக்கும் வரை மக்களின் மனம் தமக்குச் சாதகமாக மாறும் என முழுமையாக நம்பும் நம் அரசியல்வாதிகள், ஆளும் தரப்புக்கு – அதிகாரத்துக்கு – வந்ததும் மக்களின் கருத்து நிலைப்பாடு அதற்குப் பின்னரும், திரும்பவும் மாறக்கூடும் என்ற உண்மையை மறந்து விடுகிறார்கள்.

அதுதான் கோட்டாபய இழைத்த தவறும் ரணில் இழைத்த தவறும் கூட.

69 லட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்ற கோட்டாபய, தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை மக்கள் அளித்ததும், அதுவே சாசுவதமான நிலைப்பாடு என்று எண்ணிவிட்டார்.

மக்களின் மனநிலை இவ்வளவு வேகமாக சீற்றமடைந்து வருகின்றது என்பதைப் புரிந்திருந்தால் நெருக்கடி இவ்வளவு முற்றும் வரை அவர் திமிர்த்தனமாக நடந்திருக்க மாட்டார். மே 9 ஆம் திகதியை அடுத்துக் கட்டவிழ்ந்த சம்பவங்களைத் தொடர்ந்து எதிர்க் கட்சிகளுடன் ஓர் இணக்கத்துக்கு வந்திருப்பார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையே ஒழிக்கிறேன், புதிய ஆட்சிக் கட்டமைப்பு மாற்றத்தை நானே முன்னின்று நடத்துகிறேன், அதற்கு ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருட காலம் தேவைப்படும், அதைப் பொறுப்பெடுத்து செயல்படுத்தி விட்டு பதவியிலிருந்து கௌரவமாக வெளியேறுகின்றேன் என்று ஏதாவது ஒரு இணக்கத்துக்கு வந்திருப்பார். மோசமான பொருளாதார நிலையால் மக்கள் கருத்து நிலை தமக்கு எதிராக மோசமாக மாறி வருவதை அவர் நம்பவில்லை. கருத்தில் எடுக்கவில்லை.

ஒரு மாதத்திற்கு முன்னர் கோட்டாபய சுதாகரித்திருந்தால் கூட, இந்த நெருக்கடியை சாதுரியமாக கையாண்டு, இணங்கிப் போய், சமாளித்து, சேர்ந்து கொண்டு நடத்தி, மேலும் ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்கு கௌரவமாக அரசியல் நடத்தி விட்டு ஒதுங்கி இருக்கலாம். ஓடித் தப்ப வேண்டி நேர்ந்திருக்காது. ஆனால் ஆசை யாரை விட்டது?

அவர் ஒரு முட்டாள்தனமான அரசியல்வாதி என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டும் உண்டு. இதுவரை ஜனாதிபதியாக இருந்த அரசியல் தலைவர்கள் தாம் முதல் தடவை ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்படுவதற்கான வேட்பாளர் நியமனத்தை கடைசி நேரத்தில்தான் பெற்றார்கள்.

ஆனால் ஊரில் ஒரு சங்கக் கடை கிளைக்குழுத் தேர்தலில் கூட நின்ற அனுபவமே இல்லாத கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கும் திட்டம் தேர்தலுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது. பல டசின் கோடி ரூபா செலவில் கொழும்பில் ஒரு பெரிய கட்டடத் தொகுதியைப் பெற்று, அங்கு 'வியத்மக', 'எலிய' என்ற பல புத்திஜீவிகளின் அமைப்புகள் எல்லாம் நிறுவப்பட்டு, அவையெல்லாம் இரவு பகலாக உழைத்து, நேரத்தைச் செலவிட்டு, 'ஹோம் வேர்க்' செய்து, கோட்டாபய என்ற நபரை ஜனாதிபதியாக்கும் தந்திரோபாயம் முன்னெடுக்கப்பட்டது.

அந்த இரண்டு வருடக் கடும் உழைப்பின் பயனை இரண்டு வருடத்திற்குள் போட்டடித்தார் கோட்டா. அவருக்காக இரண்டு வருடங்களுக்கு மேல் கடுமையாக உழைத்த புத்திஜீவிகளில் யாருமே அவர் பதவிக்கு வந்து இரண்டு வருடங்கள் கூட அவருடன் தாக்குப் பிடிக்கவில்லை. பெரும்பாலும் எல்லோருமே நேரத்துடன் வெளியேறிவிட்டனர்.

அது போலவே மக்களின் மனநிலை புரியாதவர் ரணில் என்பது பெரும் தேசியக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அவர் இன்று கொண்டு வந்து நிறுத்தி இருக்கும் நிலைமையே சாட்சியம்.

மக்களின் மனநிலை புரியாத கோட்டாவும் ரணிலும் சேர்ந்து உருவாக்கிய அரசு ஆண்டிகள் சேர்ந்து கட்டிய மடம் என்ற நிலைமையாகிவிட்டது.




## கிளிநொச்சியை சென்றடைந்தது யாழ் ராணி விசேட ரயில் சேவை!

யாழ் கிளிநொச்சிக்கான விசேட ரயில் சேவை இன்று (திங்கட்கிழமை) ஆரம்பமாகியது.

இன்று ஆரம்பமான முதல் சேவையை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

இந்த சேவையா, தினமும் காலை 6 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும். மாவிட்டபுரத்திலிருந்து 6.05 மணிக்கும், தெல்லிப்பழையிலிருந்து 6.09 மணிக்கும், மல்லாகத்திலிருந்து 6.14 மணிக்கும், சுன்னாகத்திலிருந்து 6.18 மணிக்கும், இணுவிலிலிருந்து 6.22 மணிக்கும், கோண்டாவிலிலிருந்து 6.27 மணிக்கும், கொக்குவிலிலிருந்து 6.31 மணிக்கும் புறப்பட்டு 6.35 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே, புங்கன்குளத்தை 6.44 மணிக்கும், நாவற்குழியை 6.50 மணிக்கும், தனங்கிளப்பை 6.54 மணிக்கும், சாவகச்சேரியை 7.00 மணிக்கும், சங்கத்தானையை 7.03 மணிக்கும், மீசாலையை 7.07 மணிக்கும், கொடிகாமத்தை 7.12 மணிக்கும், மிருசுவிலை 7.14 மணிக்கும், எழுதுமட்டுவாளை 7.21 மணிக்கும் புறப்பட்டு பளையை 7.30 மணிக்கு வந்தடையும். அங்கிருந்து ஆனையிறவை 7.42 மணிக்கும், பரந்தனை 7.50 மணிக்கு வந்தடைந்து கிளிநொச்சிக்கு 7.56 மணிக்கு வந்தடையும்.

மீண்டும், காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் இந்த ரயில் பளையிலிருந்து 10.31 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 10.48 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 11 மணிக்கும் புறப்பட்டு 11.20 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

பிற்பகல் 2 மணிக்கு மறுபடியும் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்த ரயில், யாழ்ப்பாணத்திலிருந்து 2.39 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 2.59 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 3.11 மணிக்கும் புறப்பட்டு, பளையை 3.38 மணிக்கும், கிளிநொச்சியை 3.56 மணிக்கும் வந்தடைந்து, முறிகண்டியை 4.10 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் முறிகண்டியிலிருந்து 4.40 மணிக்குப் புறப்படும் இந்த ரயில் அறிவியல் நகரை 4.46 மணிக்கு வந்தடைந்து, கிளிநொச்சியிலிருந்து 5 மணிக்கு புறப்பட்டு, பரந்தனிலிருந்து 5.06 மணிக்கும், பளையிலிருந்து 5.30 மணிக்கும் புறப்பட்டு 6.44 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்து 7.20 மணிக்கு காங்கேசனை அடையும்.

அனைவரும் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்குச் செல்லாதீர் பஹ்ரைன் அதிரடி அறிவிப்பு

இலங்கைக்கு செல்ல வேண்டாம் என தமது நாட்டு பிரஜைகளுக்கு மத்திய கிழக்கு நாடான பஹ்ரைன் அறிவுறுத்தியுள்ளது.

அதேசமயம் இலங்கையில் தங்கியிருக்கும் தமது நாட்டு பிரஜைகளை உடனடியாக நாடு திரும்புமாறும் அந்த நாடு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது நாட்டுப் பிரஜைகளை அழைத்துள்ளதாக பஹ்ரைன் குறிப்பிட்டுள்ளது.

அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் அந்நாட்டு குடிமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் இருக்கும் அதன் பிரஜைகள் தமது சொந்த பாதுகாப்பிற்காக உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறும், அமைதியின்மை நிலவும் பகுதிகளில் பயணிப்பதை தவிர்க்குமாறும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளவில்லை!

### அதன் ஊடகப் பிரிவு அறிக்கை

ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் என தெரிவிக்கப்படுவதை இராணுவம் மறுத்துள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் தெளிவுபடுத்தி இராணு ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் –

கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகை வளாகத்திற்குள் கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலவந்தமாக நுழைய முற்பட்ட போது, அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இராணுவப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனக் கூறும் சில காணொலிகள் பரவி வருகின்றமை இலங்கை இராணுவத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதை இராணுவம் திட்டவட்டமாக மறுக்கிறது. ஆனால் எதிர்ப்பாளர்கள் வளாகத்திற்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில், ஜனாதிபதி மாளிகை வளாகத்தின் பிரதான நுழைவாயிலின் பக்கவாட்டு தடுப்புச் சுவர்கள் மற்றும் வான் நோக்கி துப்பாக்கி சூட்டை மேற்கொண்டனர். வான் மற்றும் பக்கச்சுவர்களில் துப்பாக்கிச் சூடு நடத்துவதால், பணியில் இருந்த அந்த இராணுவ வீரர்கள் ஆர்ப்பாட்டகாரர்களுக்கு வேண்டுமென்றே தீங்கு விளைவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்று அர்த்தப்படமாட்டாது. – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜப்பான் தேர்தலில் அபே அனுதாப அலையால் ஆளும் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம்?

ஜப்பானில் நேற்று நடந்த நாடாளுமன்ற மேல்சபை தேர்தலில் ஆளும் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது.

ஜப்பானில் நாடாளுமன்ற மேல்சபைக்கான தேர்தல் நேற்று நடந்தது. இந்த தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போதுதான், ஆளும் விடுதலை ஜனநாயக கட்சிக்கு ஆதரவு திரட்ட நாராவில் நடந்த கூட்டத்தில் பிரசாரம் செய்து கொண்டிருந்த முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுட்டு கொல்லப்பட்டார்.

இதனால், தேர்தலுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. இதனால் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்கள் பலத்த பாதுகாப்பு இடையே வாக்களித்தனர். முன்னாள் பிரதமர் அபே சுட்டு கொல்லப்பட்டமையால் உருவான அனுதாப அலையினால், ஆளும் விடுதலை ஜனநாயக கட்சி தலைமையிலான கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கைது செய்யப்பட்ட அபேயை சுட்டு கொன்ற இளைஞன் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டார். முன்னாள் பிரதமர் அபேயின் உடலும் டோக்கியோவில் உள்ள அவரது இல்லத்துக்கு கொண்டு வரப்பட்டு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அவருடைய உடல் நாளை மறுதினம் அடக்கம் செய்யப் படவுள்ளது.

தேர்தலுக்கு பின்பு ஜப்பான் ஒலிபரப்பு நிறுவனம், இதர ஊடகங்கள் வெளியிட்ட கருத்து கணிப்பில் அபேயின் ஆளும் கட்சி 125 இடங்களுடன் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம்,



2025ம் ஆண்டு நடைபெற உள்ள அடுத்த தேர்தல் வரை ஆட்சி நடத்துவதற்கான தனிப்பெரும்பான்மை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் அதிபரினால் திடீரென நீக்கப்பட்டார்

ரஷ்யாவுக்கு எதிரான போரில் சர்வதேச நாடுகளின் ஆதரவை பெறுவதில் மந்தமாக செயல்பட்டதாக, இந்தியா உள்பட 5 நாடுகளுக்கான தனது தூதர்களை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அதிரடியாக நீக்கியுள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா இடையே போர் நடந்து வரும் நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இந்தியா உட்பட ஐந்து நாடுகளில் நியமிக்கப்பட்டிருந்த தனது தூதர்களை நேற்று அதிரடியாக நீக்கினார். இந்தியா, ஜேர்மனி, செக் குடியரசு, நோர்வே, ஹங்கேரி நாடுகளுக்கான தூதர்களை அவர் நீக்கி இருக்கிறார். ரஷ்யாவுடன் போரிட்டு வரும் நிலையில், உக்ரைனுக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவையும், ராணுவ உதவிகளையும் பெறும்படி தனது நாட்டு தூதர்களிடம் அதிபர் ஜெலன்ஸ்கி உத்தரவிட்டு இருந்தார். ஆனால், இந்தியா உள்ளிட்ட இந்த 5 நாடுகளின் தூதர்கள் இதில் தோல்வி அடைந்தனர் என கருதிய ஜெலன்ஸ்கி, அவர்களை நீக்கியுள்ளார். இவர்களுக்கு வேறு பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை.

### வானில் வந்த கும்பல் அட்டூழியம்

## தென் ஆபிரிக்கா விடுதியில் 15 பேர் சுட்டுக்கொலை

தென் ஆபிரிக்காவில் மதுபான விடுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 15 பேர் கொல்லப்பட்டனர். ஜோகன்னஸ்பர்க் நகரின் சொவேட்டோ பகுதியில் இயங்கி வரும் மதுபான விடுதிக்கு கடந்த சனிக்கிழமை இரவு மினி பஸ்ஸில் வந்த மர்ம கும்பல், அங்கு கூடியிருந்த மக்களை நோக்கி கண்மூடித்தனமாக



சரமாரியாக சுட்டது. இதில், 15 பேர் உயிரிழந்தனர். இந்த துப்பாக்கிச்சூட்டை நேரில் பார்த்த மக்கள் அலறியடித்து கொண்டு சிதறி ஓடினர். குண்டு பாய்ந்து படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த 3 பேர் உள்பட பலர் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். துப்பாக்கிச்சூடு நடத்திய கும்பல், அதிக திறன் வாய்ந்த நவீன துப்பாக்கியை பயன்படுத்தி உள்ளது. உரிமம் பெற்ற மதுபான விடுதியில், அனுமதிக்கப்பட்ட நேரத்தில் குடித்து கொண்டிருந்தவர்கள் மீது எதற்காக இந்த கொடூரமான துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்பதற்கான காரணம் தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## பாகிஸ்தானில் தொடர்ந்து கொட்டிய கனமழை வெள்ளத்தில் சிக்கி 59 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் தொடர்ந்து கொட்டிய கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 59 பேர் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக பலுசிஸ்தான், கைபர் கப்துவா மாகாணங்களில் கனமழை விடாமல் கொட்டி தீர்த்தது.

கனமழை காரணமாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததால் 5 அணைகள் உடைந்து ஊருக்குள் வெள்ளம் பாய்ந்தது. இதில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் தனி தீவுகளாக மாறியது. ஏராளமான வீடுகளை வெள்ளம் அடித்து சென்றுள்ளது. 20க்கும் மேற்பட்ட இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

பாகிஸ்தானின் முக்கிய நகரமான கராச்சியும் வெள்ளத்தில் மிதக்கிறது. கொட்டி தீர்த்த கனமழையால் சாலையெங்கும் வெள்ள நீர் ஆக்கிரமித்துள்ளது. விமான நிலையத்தின் ஓடுபாதையில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் விமான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு பகுதிகளில் இடுப்பளவு வெள்ளம் சூழ்ந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கைபாதிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தானில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி இதுவரை 59 பேர் இறந்துள்ளனர் எனஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மழை சற்று குறைந்துள்ளதால் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு மேற்கொண்டுள்ளது. சராசரி அளவை விட இந்த ஆண்டு பருவமழை இதுவரை 86 சதவீத அளவு பெய்துள்ளதாக பாகிஸ்தான் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.



## உக்ரைனில் அடுக்குமாடி குடியிருப்பு மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்; 15 பேர் உயிரிழப்பு

உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ரஷ்ய படைகள் வெடிகுண்டு தாக்குதல்களில் ஈடுபட்டன. 20க்கும் மேற்பட்ட பீரங்கி, மோட்டார் மற்றும் ராக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன எனவும், டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் எல்லையை நோக்கி ரஷ்ய படைகள் முன்னேறி வருகின்றன எனவும் கிழக்கு லுஹான்ஸ்க் பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கிழக்கு உக்ரைனில் உள்ள டொனெட்ஸ்க் நகரின் மீது ரஷ்ய படைகள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 5 மாடிகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று பலத்த சேதமடைந்தது. இந்த தாக்குதலால் கட்டடத்தின் இடிபாடுகளில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர் என தகவல் வெளியாகியுள்ளது. மேலும் 15க்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர் என கூறப்படுகிறது. அவர்களை மீட்கும் பணியில் உக்ரைன் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

# இயற்கை விவசாயம் மாபெரும் வெற்றிபெறும் இந்தியப் பிரதமர் மோடி உறுதியான நம்பிக்கை



குஜராத் மாநிலம் சூரத்தில் நடைபெற்ற இயற்கை விவசாய முறை குறித்த மாநாட்டில், இந்தியப் பிரதமர் மோடி காணொலி வாயிலாக உரையாற்றியுள்ளார்.

75 ஆவது சுதந்திர தினத்தையொட்டி, பல்வேறு இலக்குகளை நோக்கி நாடு பணியாற்றத் தொடங்கியிருக்கிறது. இந்தப் பணிகள் வருங்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் பெரும் மாற்றங்களுக்கு அடிப்படையாகத் திகழும். நாட்டின், வளர்ச்சி அனைவரும் முயற்சிப்போம் என்ற உணர்வின் அடிப்படையிலானது. இந்த உணர்வு, புதிய இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை வழி நடத்துகிறது, என்று தனது உரையில் மோடி குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது எளிதான காரியமல்ல என்று கூறுபவர்களுக்கு நாடு அளிக்கும் பதில், டிஜிற்றல் இந்தியா இயக்கத்தின் அசாதாரண வெற்றிதான்.

மாற்றத்திற்கு வழி காட்ட முடியும் என்பதை நமது கிராமங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இயற்கை விவசாயம் வருங்காலத்தில் மாபெரும் வெற்றி பெறும் என்று நம்புகிறேன். ஏற்கனவே இந்த இயக்கத்தில் ஈடுபாடு உடையவர்கள், பெரும் பலனை அடைவார்கள். நமது வாழ்க்கை, நமது சுகாதாரம், நமது சமுதாயத்தின் அடிப்படை நமது விவசாய முறைதான்.

இயற்கையாகவும் கலாச்சார ரீதியாகவும் இந்தியா, விவசாயம் சார்ந்த நாடு. எனவே, நமது விவசாயிகள் முன்னேற்றமடைந்தால் விவசாயமும் முன்னேறி, அதன் மூலம் நாடும் முன்னேறும். நீங்கள் இயற்கை விவசாயத்தை மேற்கொண்டால், நீங்கள் பூமித் தாய்க்கு சேவையாற்றலாம், மண்ணின் வளத்தைப் பாதுகாக்கலாம். உற்பத்தித்திறனை மேம்படுத்தலாம்.

பண்டைக்கால அறிவாற்றலை தற்காலத் தேவைகளுக்கேற்ப விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பது பற்றி வல்லுநர்கள், தொண்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இயற்கை விவசாயப் பாதையில் மேலும் முன்னோக்கிச் செல்லவும், உலகளாவிய வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும் இதுவே சரியான தருணம். இரசாயனக் கலப்பு இல்லாத இயற்கை விளைபொருள்களுக்கான தேவை அதிகரித்து வருவதால், இயற்கை விவசாயமும் பன்மடங்கு அதிகரிக்கும். இயற்கை விளைபொருள்களுக்கு தரச் சான்று உத்தரவாத முறை செயல்படுத்தப்படுகிறது. சான்றளிக்கப்பட்ட இயற்கை விளைபொருள்களை விவசாயிகள் ஏற்றுமதி செய்தால், அவற்றுக்கு நல்ல விலை கிடைக்கும், என்றும் மோடி தனது உரையில் தெரிவித்திருக்கிறார்.



## விமானம் தாங்கிப் போர்க் கப்பல் விக்ராந்த் நான்காம் கட்ட கடல் ஒத்திகையும் நிறைவு

தற்சார்பு இந்தியா மற்றும் இந்தியாவில் தயாரிப்போம், திட்டத்தின் கீழாக விக்ராந்த் போர்க் கப்பலை, இந்திய கடற்படை மற்றும் கொச்சி கப்பல் கட்டும் தளம் ஆகியவை இணைந்து முற்றிலும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பாகங்களைக் கொண்டு உருவாக்கி உள்ளன.

இந்தக் கப்பலின் முதற்கட்ட கடல் ஒத்திகை ஓகஸ்ட் 2021 இல் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது மற்றும் மூன்றாம் கட்ட ஒத்திகைப் பயிற்சிகள், கடந்த ஆண்டு ஒக்ரோபர், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக நான்காம் கட்ட கடல் ஒத்திகை நேற்று நிறைவடைந்துள்ளது. இந்த ஒத்திகையின்போது, விமானம் புறப்பட்டுச் செல்லுதல் உள்ளிட்ட பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது.

விக்ராந்த் போர்க் கப்பலை இந்த மாத இறுதியில் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 22 அன்று இந்தக் கப்பல் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாகிஸ்தானிடம் பிரதமர் மோடியைத் தோற்கடிக்க காங்கிரஸ் ஆதரவு கேட்டதாக பி.ஜே.பி. குற்றச்சாட்டு



இந்திய நாட்டில் பயங்கரவாதம் உருவாக காரணமாக இருந்ததே காங்கிரஸ் கட்சிதான், என்று பெங்களூருவில் நேற்று நிகழ்வொன்றில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

பா.ஜனதாவுக்கு, பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாக காங்கிரஸ் தலைவர்கள் பிரசாரம் செய்து வருகிறார்கள். நமது நாட்டில் பயங்கரவாதம் உருவாக காரணமாக இருந்ததே காங்கிரஸ் கட்சிதான். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தான் நாட்டில் பயங்கரவாதம் தலை தூக்கி இருந்தது. நாட்டின் பல பகுதிகளில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி இருந்தனர்.

பயங்கரவாதிகள் நமது நாட்டில் காலூன்றுவதற்கு காங்கிரஸ் கட்சி முழு ஆதரவு அளித்திருந்தது. பிரதமர் மோடியை தோற்கடிக்க பாகிஸ்தானிடம் காங்கிரஸ் கட்சி ஆதரவு கேட்டு இருந்தது. அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியினர் பயங்கரவாதம் பற்றி பேசுவதற்கு தகுதி கிடையாது.

வாக்குவங்கி அரசியலுக்காக காங்கிரஸ் கட்சி இந்த நாட்டுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டுதான் வருகிறது, என்றும் மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்திருக்கிறார்.

## சிவசேனா அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தெரிவிக்கும் காரணங்களில் தெளிவில்லை என்கிறார் தேசியவாத காங்கிரஸ் தலைவர்



மராட்டியத்தில் சிவசேனா தலைமையில், காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் இணைந்து நடத்திவந்த கூட்டணி ஆட்சி சிவசேனா அதிருப்தி எம்.எல்.ஏக்களால் கவிழ்ந்தது. காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கூட்டணியில் இருந்து வெளியேற வேண்டும் என்பதே அவர்களின் முதன்மைக் கோரிக்கையாக இருந்தது. ஷிண்டே தலைமையில் பிரிந்துசென்ற சிவசேனா அதிருப்தி அணியினர், பா.ஜனதாவுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றினர். ஏக்நாத் ஷிண்டே முதலமைச்சராகப் பதவியேற்றார்.

இந்த நிலையில் அவுரங்காபாத்தில் 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், எதிர்காலத்தில் வரவிருக்கும் தேர்தல்களிலும் மகா விகாஸ் அகாடி கூட்டணி கட்சிகள் இணைந்து போட்டியிடவேண்டும் என்பது எனது தனிப்பட்ட விருப்பம். ஆனால், இது எனது தனிப்பட்ட கருத்துத்தான். முதலில் கட்சித் தலைவர்களுடன் இதுகுறித்து விவாதித்துவிட்டு, கூட்டணி கட்சிகளுடனும் இது குறித்து பேச்சு நடத்த வேண்டும், என்று தெரிவித்திருக்கிறார்.

சிவசேனா அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தங்கள் திடீர் மன மாற்றம் குறித்து நிலையான காரணத்தை இதுவரை கூறவில்லை. சில நேரங்களில் இந்துத்வா கொள்கையில் இருந்து தலைமை விலகிச் சென்றதுதான் காரணம் என்கிறார்கள். சிலர் தங்கள் தொகுதிக்கு சரியான நிதி கிடைக்கவில்லை என்கிறார்கள். ஆனால், இவர்கள் முன்வைக்கும் எந்த காரணங்களும் அர்த்தம் இல்லாதவையாகும்.

அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் மற்றும் நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு எப்படி இருக்கும் என்று நான் ஊகிக்க விரும்பவில்லை. நீதித்துறை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. சிவசேனா யாருக்கு என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும், என்றும் சரத்பவார் கூறினார்.



## மேகவெடிப்பால் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்ட அமர்நாத் புனித யாத்திரை மீண்டும் தொடங்கியது

ஜம்மு மற்றும் காஷ்மீரில் அமர்நாத் புனித யாத்திரைக்கு பக்தர்கள் செல்லும் குகை அருகே உள்ள பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீரென மேகவெடிப்பு ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் பெருமழை கொட்டியது. மேகவெடிப்பு ஏற்பட்டதில் சிக்கி 16 பேர் உயிரிழந்து, 45 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, காயமடைந்த நபர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். படுகாயமடைந்த நபர்கள் ஸ்ரீநகருக்கு கொண்டு செல்லப்பட்டனர். மீட்புப் பணிகள் நடந்த நிலையில் அமர்யாத் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. புனித பயணம் மேற்கொள்ளும் பக்தர்கள் முகாம்களிலேயே தங்கியிருக்க அறிவுறுத்தப்பட்டனர்.

இதுவரை நடந்த மீட்பு பணியில் 16 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. அமர்நாத் புனித யாத்திரையில் மேகவெடிப்பில் காயமடைந்து மீட்கப்பட்ட நபர்களில் ஒரு சிலர் ஸ்ரீநகரில் உள்ள ஷெர்–இ–காஷ்மீர் மருத்துவ அறிவியல் மையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களை காஷ்மீர் ஆளுநர் மனோஜ் சின்ஹா நேரில் சென்று சந்தித்து அவர்களது உடல்நலம் பற்றி கேட்டறிந்து அவர்களுக்கு ஆறுதலும் கூறியுள்ளார்.

அமர்நாத் புனித யாத்திரை மேகவெடிப்பு மற்றும் பெருமழை ஆகியவற்றால் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டிருந்த நிலையில், இன்று காலை மீண்டும் தொடங்கியுள்ளது. இதனையடுத்து பக்தர்கள் அடங்கிய குழு ஒன்று ஜம்முவில் உள்ள முகாமில் இருந்து புறப்பட்டு தரிசனத்திற்கு சென்றுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

# கிழக்கில் ஹஜ் தொழுகைகள்

ஹஜ்ஜுப் பெருநாள் நபிவழி திடல் தொழுகை இம்முறை இலங்கை முழுவதும் நேற்று சிறப்பாக இடம் பெற்றது.

கிழக்கிலும் இஸ்லாமிய மக்கள் தமது மத வழிபாட்டைச் சிறப்பாக முன்னெடுத்தனர். இவற்றின்போது பெருநாள் தொழுகை மற்றும் குத்பா உரை போன்றவையும் பெற்றன. கிழக்கில் அவை பற்றிய காட்சிகள் வருமாறு:


மருதமுனைக் கடற்கரை திறந்தவெளியில்


சாய்ந்தமருது 12 கடற்கரைத் திடலில்


கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில்


கல்முனை கடற்கரை வீதி ஹுதா திடலில்

# திருக்கோவிலில் இன்று முதல் ஆயிரம் பேருக்கு அன்னதானம்

## 18 நாள்கள் ஆலய உற்சவத்தை ஒட்டி



(காரைதீவு குறூப் நிருபர் சகா)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமையிலிருந்து ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவக் கொடியேற்றம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் இன்று இடம்பெற இருக்கின்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் இந்த ஏற்பாடுகள் பற்றிக் கூறுகையில்.

இன்று கொடியேற்ற தினத்தில் இருந்து தினமும் பகல் வேளையில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தொடர்ச்சியாக 18 நாள்கள் வழங்கப்பட்டு 28ஆம் திகதி சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் அன்னதான நிகழ்வு நிறைவு பெற இருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் வாழும் பரோபகாரி கனகலிங்கம் ஒன்றரை கோடி ரூபா செலவில் அன்னதானம் வழங்கவென ஆலயத்தில் அமைத்து கொடுத்த திருமூலர் திருமடத்திலே அன்னதான நிகழ்வு தொடர்ச்சியாக தினமும் இடம் பெற இருக்கின்றது.

இதற்கென்று அவர் ஆஸ்திரேலியாவிலிருந்து ஆயிரம் எவர்சில்வர் பீங்கான்களையும் அவர் அனுப்பி வைத்திருக்கின்றார்.

இந்தக் காலப்பகுதியிலே ஆலயத்திற்கு வரும் கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் மற்றும் ஊர் மக்கள், அடியார்கள் அனைவரும் இந்த பகல் அன்னதானத்திலே கலந்து கொள்ளலாம் என்று தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த அன்னதானநிகழ்விற்கு யாராவது உதவி செய்ய முன் வந்தால் தாராளமாக உதவி செய்யலாம். அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தனித்தனியாக பற்றுச்சீட்டு வழங்கப்படும் .அதேவேளை அவர்களது பெயர் விவரமும் வட்ஸ் அப் குழுவில் பகிரங்கமாக அறிவிக்கப்படும் என்றும், ஆலய அன்னதான குழுவினரே இதனை தொடர்ந்து மேற் கொள்வார்கள் என்றும் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

# மட்டு. அரசடித்தீவில் முத்தமிழ் சங்கமம்

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு அரசடித்தீவு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய உற்சவத்தின் இறுதிநாள் சடங்கைச் சிறப்பிக்கும் முகமாகவும், 'இளங்கதிர்' கலாமன்றத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் முகமாகவும் 'முத்தமிழ் சங்கமம் -2022' நிகழ்வு நாளை 12 ஆம் திகதி முத்துமாரியம்மன் ஆலய அரங்கில் இரவு 9.30 மணிக்கு அரங்கேறவுள்ளது.

இந்நிகழ்வு 'இளங்கதிர்' கலாமன்றத் தலைவர் ரி.பேரின்பராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு இப்பிரதேச பொதுமக்களை வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# சட்டவிரோத மது விற்பனை; குமாரபுரத்தில் பெண் கைது!

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள குமாரபுரம் புன்னைச்சோலை பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் இரவு அதிரடியாக முற்றுகையிட்ட பொலிஸார், அதை நடத்தி வந்த 45 வயதுடைய பெண் ஒருவரைக் கைது செய்யதுள்ளனர்.

இதன்போது, கால் போத்தல் கொண்ட மதுபானப் போத்தல்கள் 126 கைப்பற்றப்பட்டன என, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.



# விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்தார் ஜோகோவிச்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், அவுஸ்திரேலியாவின் நிக் கிர்ஜியோஸ் ஆகியோர் மோதியிருந்தனர்.

இந்தப் போட்டியில் முதல் செட்டை கிர்கியோஸ் 6-4 என கைப்பற்றினார். இதனால் சுதாகரித்துக் கொண்ட ஜோகோவிச் அதிரடியாக ஆடி 6-3, 6-4, 7-6 என்ற செட் கணக்கில் அடுத்த 3 சுற்றுகளையும் வென்று சம்பியன் பட்டத்தையும் தக்கவைத்துக் கொண்டார். விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை ஏழாவது முறையாக நோவக் ஜோகோவிச் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, அரையிறுதி ஆட்டத்தில் நோவக் ஜோகோவிச், இங்கிலாந்தின் கமரூன் நூரியுடன் மோதியிருந்தார். இதில் முதல் செட்டை கேமரூன் நூரி 6-2 என கைப்பற்றினார். ஆயினும், அதையடுத்த செட்களில் ஜோகோவிச் அதிரடியாக ஆடி 6-3, 6-2, 6-4 என்ற கணக்கில் அடுத்த 3 சுற்றுகளை வென்று எட்டாவது முறையாக இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் ஸ்பெயின் நாட்டைச்சேர்ந்தரபேல்நடால், அவுஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோசுடன் மோதவிருந்த நிலையில், வயிற்றுத் தசையில் ஏற்பட்ட காயம் காரணமாக நடால் அரையிறுதியில் இருந்து விலகுகிறேன் என அறிவித்தார். இதை யடுத்து, இறுதிப்போட்டியில் விளையாடுவதற்கு நிக் கிர்கியோஸ் போட்டியின்றித் தேர்வாகியிருந்தார்

## ரி-20 தொடரைக் கைப்பற்றியது இந்திய கிரிக்கெட் அணி மூன்றாவது போட்டியில் இங்கிலாந்துக்கு ஆறுதல் வெற்றி



இங்கிலாந்து, இந்திய கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ரி-20 போட்டி நேற்று நொட்டிங்காமில் நடைபெற்றது. இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து களமிறங்கியது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை குவித்தது. அந்த அணியில் டேவிட் மலான் அதிரடியாக ஆடி 39 பந்துகளில் 77 ஓட்டங்களையும், லிவிங்ஸ்டோன் 42 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் எடுத்தனர். இந்தியா சார்பில் ரவி பிஷ்னோய், ஹர்ஷல் படேல் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதையடுத்து, 216 என்ற வெற்றி இலக்குடன் இந்தியா களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்பட்ட ரிஷப் பண்ட் ஒரு ஓட்டத்தோடும், விராட் கோலி, ரோகித் சர்மா இருவரும் தலா 11 ஓட்டங்களோடும் ஆட்டமிழக்க, 31 ஓட்டங்களை எடுத்த நிலையில் இந்தியா 3 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது. அடுத்து இறங்கிய ஷ்ரேயஸ் அய்யர், சூர்யகுமார் யாதவுடன் ஜோடி சேர்ந்தார். ஷ்ரேயஸ் நிதானமாக ஆட சூர்யகுமார் அதிரடியில் இறங்கினார். மைதானம் முழுவதும் பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் சூர்யகுமார் யாதவ் 48 பந்துகளில் தனது முதல் சதத்தைப் பதிவு செய்தார். அவர் 55 பந்துகளில் 117 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அவரது ஆட்டமிழப்பிற்குப் பின்னர் இந்திய அணியால் வெற்றி இலக்கை எட்டுவது அசாத்தியமாகிப் போனது. இறுதியில், 20 ஓவர்களில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை எடுத்து இங்கிலாந்து அணியிடம் 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தொடரின் முதலிரு போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்தியா 2-1என்ற கணக்கில் இங்கிலாந்துடனான ரி-20 தொடரை கைப்பற்றியது.



## அயர்லாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டி நியூசிலாந்து அணிக்கு திரில் வெற்றி

நியூசிலாந்து கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்த நாட்டு அணியுடன் 3 ஒருநாள் போட்டிகள், மூன்று ரி-20 போட்டி கொண்ட தொடர்களில் விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கும் இடையே டப்ளினில் நேற்று நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அயர்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 300 ஓட்டங்களைச் சேர்த்தது. அதிகபட்சமாக அந்த அணி வீரர் ஹரி டெக்டர் 113 ஓட்டங்களை எடுத்திருந்தார். கேர்டிஸ் கம்பர் 43, அன்ட்டி மக்பிரைன் 39 ஓட்டங்களைப் பெற்றனர்.

301 ரன்கள் என்ற இலக்கை நோக்கி களம் இறங்கிய நியுசிலாந்து அணியில் தொடக்க வீரர் மார்டின் கப்டில் 51 ஓட்டங்களை எடுத்தார். அடுத்தடுத்த துடுப்பாட்ட வீரர்கள் பெரிதாகச் சோபிக்காத நிலையில், க்ளென் பிலிப்ஸ், வீரர் மைக்கேல் பிரேஸ்வெல் ஜோடி நம்பிக்கை தரும் விதத்தில் விளையாடியது. க்ளென் பிலிப்ஸ்38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தாலும், ஒரு பக்கம் விக்கெட்டுக்கள் விழுந்த நிலையில் மறுபுறம் அதிரடி காட்டிய மைக்கேல் பிரேஸ்வெல் 82 பந்துகளில் 127 ஓட்டங்களைக் குவித்து கடைசி வரை களத்தில் இருந்து தனது அணியை வெற்றிபெற வைத்தார். நியூசிலாந்து அணி 49.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கள் இழந்த நிலையில் இலக்கையடைந்து ஒரேயொரு விக்கெட்டினால், ஒரேயொரு பந்து மீதமிருக்க திரில்லானதொரு வெற்றியைப் பெற்றது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக நியூசிலாந்துக்கு வெற்றியைப் பெற்றுத்தந்த மைக்கேல் பிரேஸ்வெல் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான தொடரின் இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் பிரிவு அமெரிக்கா—பிரிட்டன் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் தர வரிசையில் இரண்டாம் இடத்தில் உள்ள அமெரிக்க வீராங்கனை டெசிரே க்ராவ்சிக் மற்றும் பிரிட்டன் வீரர் நீல் ஸ்குப்ஸ்கி ஜோடி, அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மத்யூ எப்டன் மற்றும் சாம் ஸ்டோசர் ஜோடியை எதிர்கொண்டது. மொத்தம் ஒரு மணி நேரம் 27 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போட்டியின் முடிவில் 6-4, 6-3 என்ற நேர் செட்கணக்கில் க்ராவ்சிக் - ஸ்குப்ஸ்கி ஜோடி வெற்றி பெற்று பட்டத்தை தட்டிச் சென்றது.

இந்தத் தொடரில் அமெரிக்கா வீராங்கனை டெசிரே க்ராவ்சிக்வும் பிரிட்டன் வீரர் நீல் ஸ்குப்ஸ்கியும் வேறு வேறு ஜோடிகளுடன் கலந்துகொள்ள இருந்த நிலையில், திடீர் மாற்றமாக இறுதி நேரத்தில் இருவரும் ஜோடி சேர்ந்து வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தையும் தட்டிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மக்கள் எதிர்பார்ப்புக்கமைய இவ்வாரத்துக்குள் சர்வகட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுமாம்!

## உத்தரவாதமளிக்கிறார் விமல்



சர்வகட்சி அரசாங்கம் ஸ்தாபிப்பதைத் தடுக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தந்திரமான முறையில் செயற்பட்டதன் விளைவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது எதிர்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி உட்பட பிரதமர் நாகரிகமான முறையில் பதவி விலக வேண்டும். நாட்டு மக்களின் எதிர்பார்ப்பிற்கமைய இவ்வார காலத்துக்குள் சர்வகட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முறையற்ற வகையில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்காமலிருந்திருந்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இந்நிலைமை ஏற்பட்டிருக்காது.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே இல்லாதொழித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை பதவி விலகுமாறு நாட்டு மக்கள் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்கள்.

ஜனநாயக ரீதியிலான அமைதி வழி போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தை தீக்கிரையாக்கியுள்ளமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வியெழுப்புகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பற்ற வகையில் பதிலளித்து, விடயத்தை திசைத்திருப்பி விடுவதை நாட்டு மக்கள் முழுமையாக அவதானித்துள்ளார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் முழுமையாக புறக்கணித்துள்ளார்கள். ஆகவே, தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தின் ஊடாக அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராய வேண்டும்.

பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கும் யோசனைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு நாட்டு மக்கள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில் பதில் ஜனாதிபதியாக நியமித்தால் மக்கள் மீண்டும் அரசியல்வாதிகள் மீது இலக்கு வைப்பார்கள்.

மே மாதம் 9 ஆம் திகதி கற்றுக்கொண்ட படிப்பினை நினைவில் உள்ளது. நாட்டு மக்களும், சர்வதேசமும் ஏற்றுக்கொள்ளும் ஒருவரை பிரதமராக நியமித்து சர்வகட்சி அரசாங்கத்தை குறுகிய காலத்துக்குள் ஸ்தாபிப்பதே தற்போதைய பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக அமையும். – என்றார்.

# ஜனாதிபதி கதிரையில் ரணிலை ஒரு நாளேனும் அமர விடோம்!

## போராட்டக்களத்திலிருந்து விடுக்கப்பட்ட அறிவிப்பு

13 ஆம் திகதி வரை காத்திருந்து சுபநேரத்தை பார்த்து காலத்தைக் கழிக்காமல் உடனடியாக இராஜினாமா கடிதங்களை கையளிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு போராட்டக்கள செயற்பாட்டாளர்கள் முக்கிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளனர்.

காலி முகத்திடல் கோட்டா கோ கிராமத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே போராட்டக்கள செயற்பாட்டாளர்கள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

நாட்டை விட்டு வெளியேறாது சுபநேரத்தை பார்த்துக்கொண்டு பதவி விலகாமல் இன்னும் ஒரு நாள் ஆட்சியில் இருக்க முற்பட்டால், அதற்கு இடமளிக்க முடியாது.

கோட்டாபய ராஜபக்ஷ சென்றவுடன் ஜனாதிபதி கதிரையில் அமரலாம் என ரணில் ஒருபோதும் நினைக்க முடியாது. ரணிலை ஜனாதிபதி கதிரையில் ஒரு நாளேனும் அமரவிடமாட்டோம்.

ஜனாதிபதி இராஜினாமா கடிதத்தைக் கையளிக்கும் வரை மக்களின் கட்டுப்பாட்டிலிருந்து கட்டடங்கள் விடுவிக்கப்படமாட்டா. பதவி விலகுவதாகக் கூறி விளையாட முற்பட்டால் ஜனாதிபதியை ஒருநாளேனும் இருக்க விடமாட்டோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் வெளியேறியதன் பின்னர், சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க சிலர் காத்திருக்கின்றனர். அவர்களுக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். ஆனால் மக்களின் அரசியல் கோரிக்கைகளை உள்ளடக்கிய நிபந்தனைகளுடன் கூடிய இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும்.

மேலும், நாடாளுமன்றத்தில் அரசியல் கட்சிகள் சர்வகட்சி அரசாங்கத்தை கட்டியெழுப்பு முயற்சித்தால் அதற்கு இடமளிக்க மாட்டோம்.

மக்கள் போராடினார்கள், இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர், அனைத்துக் கட்சிகளின் ஊழல்களுக்கு இன்னொரு வாய்ப்பு கொடுக்க முடியாது.

எனவே காலத்தை கழிக்காமல் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாக இராஜினாமா கடிதங்களை கையளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.



# 13 ஆம் திகதி பதவி விலகல் மற்றுமொரு சதித் திட்டமே?

## குமார் குணரட்ணம் தெரிவிப்பு

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என முன்னிலை சோஷலிச கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்காலத்தில் யாருக்கு அதிகாரம் கிடைத்தாலும் போராட்டத்தின் எதிர்பார்ப்புகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி, சபாநாயகர் ஊடாக 13 ஆம் திகதி பதவி விலகுவேன் என அறிவித்துள்ளமை மற்றுமொரு சதியோ தெரியவில்லை எனவும் காரணம் இவர்களுடைய அரசியல் வரலாறு அப்படிப்பட்டது எனவும் குமார் குணரட்னம் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரசியல்வாதிகளின் உருவ பொம்மைகள் மீது வட்டுக்கோட்டையில் எச்சில் உமிழ்ந்த மக்கள்!







ஜனாதிபதி கோட்டாபயவை பதவி விலகுமாறு கோரி வட்டுக்கோட்டையில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் கோட்டா, மஹிந்த, ரணில், பஸில் ஆகியவர்களது உருவ பொம்மைகள் மீது மக்கள் தாக்குதல் நடத்தினர்.

வட்டுக்கோட்டை – மாவடி சந்தியில் இருந்து ஆரம்பமான இந்தப் போராட்டம் பேரணியாக சித்தங்கேணி சந்தி ஊடாக சென்று சங்கானை பஸ் நிலையத்தில் நிறைவடைந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி அமைப்பாளர் சதாசிவத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்திருந்தனர்.

போராட்டக்காரர்கள் கோட்டாபய, மஹிந்த, பஸில், ரணில் ஆகியோரின் உருவ பொம்மைகளை ஊர்வலமாக எடுத்து வந்து சங்கானை பஸ் தரிப்பிடத்தில் வைத்து பொம்மையை கொட்டன்களால் தாக்கி அதன்மீது எச்சில் உமிழ்ந்து தீயிட்டு எரித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2022இல் வெளியிடப்பெற்றது.